# COUNCIL OF CBSE AFFILIATED SCHOOLS IN THE GULF

## GULF SAHODAYA EXAMINATION, FEBRUARY 2009 / MARCH 2009

**Subject : TAMIL**

Class : IX — Max. Marks : 100

Date : 25 FEB 2009 — Duration : 3 hours

Code No. : 92100

குறிப்பு :- 1. கையெழுத்து தெளிவாய் இருத்தல் வேண்டும்.

2. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் அமைதல் வேண்டும்.

3. வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதவும்.

4. கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை, முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

பகுதி – அ

**I. அ. எவையேனும் ஐந்தினுக்குச் சான்று தருக.** 5

1. பண்மைப் பொதுப்பெயர்
2. வினாப்புணர்ச்சி
3. பெயர் இயற்சொல்
4. குற்றியலிகரம்
5. கடைப் போலி
6. இன்னிசை அளபெடை
7. புறச்சுட்டு

**ஆ. எவையேனும் ஐந்தினுக்கு மட்டும் ஏற்ற சொற்களை இட்டுப் பூர்த்தி செய்க.** 5

1. எழுத்து வகையால் புணர்ச்சி ____________ வகைப்படும்.
2. மெய்யெழுத்து ____________ வகைப்படும்.

3. எழுத்துகள் ____________ , ____________ என இரு வடிவங்களைக் கொண்டுள்ளன.

4. ஔகாரக் குறுக்கம் மொழிக்கு ____________ மட்டும் வரும்.

5. சார்பெழுத்துகள் ____________ வகைப்படும்.

6. ஓர் எழுத்து தனித்து வந்து பொருளைத் தந்தால் அது ____________ எனப்படும்.

7. தொலைவில் இருப்பதை சுட்டுவது ____________ .

**இ. எவையேனும் ஐந்தினைக் கூறியபடி மாற்றி எழுதுக. 5**

1. அவ்வீடு (சுட்டுத்திரிபாக்குக)

2. மரம் + கடை (சேர்த்து எழுதுக)

3. அழகு (சுட்டுப்புணர்ச்சியாக்குக)

4. ஊ (இன எழுத்தை எழுதுக)

5. தமிழ்நாடு (எவ்வகைப் புணர்ச்சி)

6. ஔ (ஔகாரக் குறுக்கமாக்குக)

7. ஆடினான் (பகுதி, விகுதி – எழுதுக)

**II. அ. ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு விரிவான கட்டுரை எழுதுக. 12**

1. கல்வி - யாவருக்கும் கல்வி - கிராமங்களிலும் கற்றல் ஆர்வம் - வாழ்வுக்கு உதவும் வகையில் கல்வியில் மாற்றம் - தன் காலில் நிற்கும் ஆற்றல் வளர்த்திடக் கல்வி உதவுதல் - வாழ்வில் புதுமலர்ச்சி - ஒளிமயமான எதிர்காலப்பாதையில் இளைஞர் நடைபோட வழிவகை செய்தல்.

2. நூலறிவின் சிறப்பு - நூல்நிலையங்களின் இன்றியமையாமை - நூல்நிலைய அமைப்பு - பள்ளி நூல்நிலையம் - நடமாடும் நூல்நிலையம் - நிலையான நூல்நிலையம் - பயன்கள் - பயன்பெற்ற பெரியோர்கள் - நம் கடமை.

3. உடற்கல்வி - அறிவு, மனம், சுயக்கட்டுப்பாடு வளரும் - தோல்வியினால் துவளாத மனம் - சான்றிதழ்கள் - பரிசுகள் - இட ஒதுக்கீடு - வேலை வாய்ப்பு - சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை - அறிஞர்களின் அறிவுரைகள் - பயன்கள் - உடற்பயிற்சியின் அவசியம்.

ஆ. நீ வாழும் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைச் சுட்டிக்காட்டி மாசுத்தடுப்பு துறை அதிகாரிக்குப் புகார்க் கடிதம் எழுதுக. 10

அல்லது

உனது மறக்கமுடியாத அனுபவம் ஒன்றை விளக்கி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. உனது முகவரி :- எழிலரசன் / எழிலரசி, 14 வள்ளுவர் நகர், சைதாப்பேட்டை, சென்னை - 30.

இ. நீ வாழும் பகுதியில் உள்ள வங்கி ஏற்பாடு செய்த கல்விக் கடன் வழங்கும் விழாப்பற்றி அறிக்கை எழுதுக. 8

அல்லது

திருச்சி நகரில் நடைபெற்ற கண்தானம் பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் பற்றி செய்தியறிக்கை எழுதுக.

III. பின் வரும் உரைநடையைப் படித்துச் சொந்த நடையில் விடை தருக. 15

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது ஒழுக்கமே ஆகும். "ஒழுக்கம் விழுப்பம் தரும்", "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை" என்பது ஆன்றோர் வாக்கு. ஒழுக்கம் என்பது எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தூய்மையாக நடந்து கொள்வதாகும். இந்த ஒழுக்கமே மனிதனை மனிதனாகவும், தெய்வமாகவும் உயர்த்தும். உயிரைக் காட்டிலும் உயர்வானது.

உலகப் பொதுமறையாம் திருக்குறள் ஒழுக்கமுடைமை, அறன் வலியுறுத்தல், சான்றாண்மை முதலிய அதிகாரங்களில் நல்ல ஒழுக்கங்களை வலியுறுத்துகின்றது. சினம், பொறாமை, பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல், கொடிய சொற்கள் ஆகிய நான்கை நீக்கி ஒழுகுதல் அறம் என வள்ளுவர் கூறுகிறார். அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவை ஒழுக்கம் என்னும் மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்றும் கூறுகிறது திருக்குறள்.

வினாக்கள் :-

1. மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது எது? (2)
2. ஆன்றோர் வாக்குகள் எவை? (2)
3. ஒழுக்கம் உடையவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? (2)
4. திருக்குறள் கூறும் கருத்துகள் எவை? (2)
5. உயிரைக் காட்டிலும் உயர்வானது எது? ஏன்? (2)
6. வள்ளுவர் கூறும் கருத்து யாது? (2)
7. மாளிகை என்று திருக்குறள் எதைக் கூறுகிறது? (3)

## பகுதி ஆ

**IV.** அ. **செய்யுள் பகுதியில் ஏதேனும் ஒன்றைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.** **5**

**(i)** வீதியில் சாலையில் வாகனங்கள்
வெளியிடும் புகையால் உடல்நலங்கள்
பாதிக் கும்நிலை உண்டாகும்
பரப்புகின்ற ஒலியாலே
காதினில் இரைச்சலை ஏற்படுத்தும்!
கவனமும் சிதறும் அறிந்திடுவோம்!
மேதினி யில்சுற் றுப்புறத்தை
மேன்மை யாகவே வைத்திருப்போம்!

1. இப்பாடல் ஆசிரியர் யார்? எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது? (1)
2. எதனால் உடல்நலம் பாதிக்கும்? (2)
3. எதனால் கவனம் சிதறும்? (2)

அல்லது

**(ii)** தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

1. இப்பாடலின் ஆசிரியர் யார்? இப்பாடல் எந்த அதிகாரத்தின் கீழ் வருகிறது? (2)
2. இப்பாடலின் பொருளினை எழுதுக. (2)
3. பொருள் எழுதுக :- (1)

அ. காவாக்கால் ஆ. சினம்

ஆ. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** **2 x 5 = 10**

1. பாரதியார் கூறும் பாரதப் பூமியின் பெருமைகளைத் தொகுத்து எழுதுக.
2. இறைவனிடம் திரு.வி.க. வேண்டுவன யாவை?
3. விண்மீன் கூட்டத்திற்குக் கவிஞரால் காட்டப்பட்ட உவமைகளைத் தொகுத்து எழுதுக.
4. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை?

**V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** **3 x 5 = 15**

1. சாதாரணப் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் படித்தவர்கள் நிகழ்த்திய சாதனைகளாக டாக்டர் அப்துல் கலாம் குறிப்பிடுவன யாவை?

2. அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. எவ்வாறு விளக்குகிறார்?

3. அறிவுரை கூறுதல் பற்றி மு.வ. அவர்களின் கருத்து யாது? இல்வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என்று மு.வ. வாழ்த்துகிறார்?

4. வ.உ.சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

5. கவிராயருக்குச் சேதுபதி மன்னர் கலையூரைப் பரிசளிக்கக் காரணம் என்ன?

**VI. அ. பின்வரும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடை தருக** **1 x 6 = 6**

1. சபேசன் காப்பியின் வளர்ச்சி இரகசியம்.

2. குருவிப்பட்டிப் பாலமும் பொன்னம்பலமும்.

**ஆ. ஏதேனும் இரண்டிற்கு விடை தருக.** **2 x 2 = 4**

1. ரமணனின் பண்பினைப் பற்றி எழுதுக.

2. “தாய்ப்பசு” கதை உணர்த்தும் நீதியினை எழுதுக.

3. ராமேஸ்வரத்தில் பாறைப்பட்டி நாயக்கர் கண்டவற்றை எழுதுக.

* * * * * * * * *